Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages 

CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 19 Click - 01
APRIL 2023 Re. 1

அன்பார்ந்த சங்க உறுப்பினர்களே!

உங்களுக்கு மாதம் தோறும் அனுப்பப்படும் நியூஸ் பேப்பர் மற்றும் கடிதங்கள் வரவில்லை என்றால் நமது சங்கத்தின் பிஆர்ஓ ரவிக்குமார் ( 9841272071 ) அவர்களை தொடர்பு கொண்டு தெரிவிக்கவும். அல்லது உங்கள் பகுதிச் செயலாளரிடம் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு : DM. **பிரேம்குமார்**, CVPA செயலாளர்




# TVPA வின் டிஜிமீடியா 2023 சர்வதேச போட்டோ வீடியோ கண்காட்சி

சென்னை நந்தம்பாக்கம் டிரேடு சென்டரில் வரும் 14 ,15,16 ஆகிய மூன்று நாட்களும் TVPA வின் டிஜிமீடியா 2023 சர்வதேச போட்டோ வீடியோ கண்காட்சி மிகபிரம்மாண்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கண்காட்சி யை காண்பதற்கு தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஒளிப்பட கலைஞர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கண்காட்சி கூடிகஅ என அழைக்கப்படும் தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர் அசோசியேசன் வெகு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளது. இது குறித்து TVPA வின் மாநிலத் தலைவர் திரு சிவக்குமார் அவர்கள் CVPA NEWS க்கு அளித்த பேட்டி. ..

நமது தொழில் சார்ந்த இந்த டிஜிமீடியா போட்டோ வீடியோ கண்காட்சியை நம் தொழில் கலைஞர்களுக்காக நமக்கு நாமே ஏற்பாடு செய்து நடத்தி வருகிறோம். அதாவது இதுவரை கேமரா தயாரிப்பு நிறுவனங்களும், இத்தொழில் சார்ந்து தயாரிக்கப்படும் ஏனைய உபகரண தயாரிப்பாளர்களும் கார்ப்பரேட் நிறுவனங்களை நம்பியே வியாபாரம் செய்து வந்தார்கள். இந்த கார்ப்பரேட் நிறுவனங்கள் சங்கங்களை தங்களது சுயலாபத்திற்காக பயன்படுத்திக் கொண்டார்களே தவிர நமது சங்க உறுப்பினர்கள் பயனடையும் விதத்தில் எதையும் அவர்கள் செய்யவில்லை.

இதன் அடிப்படையில் நமக்கு நாமே என்ற கொள்கை முடிவின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு முதன் முறையாக டிஜி மீடியாவை சென்னை, நந்தம்பாக்கம், டிரேடு சென்டரில் வெற்றிகரமாக நடத்தி காட்டினோம். இது நாம் நடத்தும் நான்காவது சர்வதேச புகைப்பட கண்காட்சி ஆகும். இன்று நாம் வழி வகுத்து காட்டிய கொள்கை முடிவின்படி இந்தியாவில் பல்வேறு மாநில சங்கங்கள் போட்டோ வீடியோ கண்காட்சி யை வெற்றிகரமாக நடத்தி வருகின்றன. நம் தொழில் சார்ந்த தயாரிப்பு நிறுவனங்களும் இதைத்தான் விரும்புகின்றன.

இம்மாதம் 14,15,16, ஆகிய தேதியில், மூன்று நாட்கள் நடைபெறும் டிஜி மீடியா 2023 சர்வதேச கண்காட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நம் தொழில் தொடர்புடைய அனைத்து முன்னணி நிறுவனங்களும் இந்த கண்காட்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். இந்த கண்காட்சியில் கலந்து கொள்ளும் நிறுவனங்கள் தங்கள் பொருட்களை வாங்கும் ஒளிப்பட கலைஞர்களுக்கு சிறப்பு தள்ளுபடியும் வழங்க உள்ளன. டிஜி மீடியா எக்ஸ்போவில் வழங்கும் தள்ளுபடி அல்லது சலுகைகளை நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகின்றோம்.

இந்த கண்காட்சிக்கு மாநில சங்கம் சார்பாக அரசியல் கட்சி பிரமுகர்கள், சி ன்னத்திரை மற்றும் பெரிய திரை நட்ச த்திரங்கள், பொதுநல நோக்கம் கொண்டவர்கள், வியாபாரிகள் என்று பல்வேறு சிறப்பு அழைப்பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்த கண்காட்சியைக் காண்பதற்கு தொலைதூரத்தில் இருந்து வருகை தரும் ஒளிப்பட கலைஞர்கள் தங்களை தயார் படுத்திக் கொள்ள ஏதுவாக சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது குறித்து அந்தந்த மாவட்ட சங்க நிர்வாகிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்த வசதி தேவைப்படுவோர் மாவட்ட சங்க நிர்வாகிகளை தொடர்பு கொண்டு கேட்டு தெரிந்து கொள்ளலாம். மேலும் வெளி மாவட்டத்தில் இருந்து வருகை தரும் ஒளிப்பட கலைஞர்கள் தங்கள் பொருட்களை பத்திரமாக கொண்டு போய் சேர்க்கும் விதமாக பார்சல் சர்வீஸ் புக்கிங் வசதியும் செய்யப்பட்டுள்ளது.

கார்ப்பரேட் நிறுவனங்கள் நடத்தும் கண்காட்சியில் குடி தண்ணீர் கிடைப்பதில்லை, கேண்டினில் வழங்கப்படும் உணவுப் பண்டங்களின் விலையும் உயர்வு என்று உறுப்பினர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில், டிஜி மீடியா எக்ஸ்போவில் ஆங்காங்கே சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் வைக்கப்பட்டுள்ளது. உணவுப் பொருட்களின் விலையும் மலிவாக கிடைக்கும் வகையும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர நடமாடும் மொபைல் ஏடிஎம் சர்வீஸும் டிரேடு சென்டர் அருகில் வரவழைக்கப்பட்டுள்ளது.

டிஜிமீடியா நடைபெறும் மூன்று நாட்களும் கலந்துரையாடல், கருத்தரங்கம், போட்டோகிராபி ஒர்க் ஷாப், போட்டோஷாப் மற்றும் லைட் ரூம் ஒர்க் ஷாப், அட்வான்ஸ் போட்டோகிராபி ஒர்க் ஷாப், சோசியல் மீடியா மார்க்கெட்டிங் , டிரோன் பிளையிங் பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்னணி ஒளிப்பட பயிற்றுநர்களான, திரு. ராஜா பொன்சிங் அவர்கள், திரு .கௌரி சங்கர் அவர்கள், திரு. புலிவலம் ரவி அவர்கள், வேலைக்காரன். திரு. செந்தில் அவர்கள், திரு. சாய் ரகுநாத் அவர்கள், மேகி. திரு .தங்கம் அவர்கள், திரு. சந்ரு பாரதி அவர்கள், திரு.அருண் சித்தார்த் அவர்கள், திரு. சுந்தர், திரு. பிரபு ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இன்றைய இளம் ஒளிப்பட கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில்சு தமிழர்களின் கலாச்சாரம் ˙ எனும் தலைப்பில் புகைப்பட போட்டியும், ˙ சமூகத்தின் புற்றுநோய் ˙ எனும் தலைப்பில் குறும்பட போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர சேலம் . திரு. சூர்யா அவர்கள் , காஞ்சிபுரம். திரு. சுபாஷ் அவர்கள் , சேலம். திரு.சீனிவாசன் இவர்களின் மேற்பார்வையில் சென்னை, காசிமேடு பகுதியில் போட்டோ வாக் நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களில் மதிக்கப்படும் மூத்த புகைப்பட கலைஞர்களை டிஜி மீடியா எக்ஸ்போவிற்கு நேரில் அழைத்து வந்து பாராட்டி, கௌரவித்து அவர்களுக்கு நினைவு பரிசு வழங்க இருக்கிறோம்.

இந்த மாபெரும் கண்காட்சியை ஒளிப்பட கலைஞர்கள் அனைவரும் பேராதரவு தந்து சிறப்பிக்க வேண்டும் என்று தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர் அசோசியேசன் சார்பாக கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு கூறியுள்ளார்.

## அறிவிப்பு

நமது சங்கத்தில் ரெனிவல் செய்ய விரும்புகின்றவர்கள் இம்மாதம் 14, 15, 16 ஆகிய தேதிகளில் சென்னை நந்தம்பாக்கத்தில் நடைபெறும் டிஜி மீடியா எக்ஸ்போவில் அமைந்துள்ள CVPA ஸ்டாலில் ரினிவல் செய்து கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு
DM. **பிரேம்குமார்**
CVPA செயலாளர்

# டிஜிமீடியா எக்ஸ்போவில் CVPA உறுப்பினர்களுடன் ராஜா பொன்சிங் கலந்துரையாடுகிறார்!

சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் வணக்கம்.

கடந்த சில மாதங்களாக நமது சங்கம் குறித்தும், மாநில சங்கம் குறித்தும், உண்மைக்கு மாறான தகவல்கள் ஒரு சில வாட்ஸ் அப் குழுக்களில் பகிர்ந்து வருவது குறித்து சங்க உறுப்பினர்கள் மூலமாக நமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பொதுவாக வெளி மாவட்ட சங்க உள் விவகாரங்களில் நமது ச ங்கம் எப்போதும் தலையிடுவதில்லை. அது போலவே மற்ற மாவட்ட சங்கங்களும் நமது ச ங்கத்தை ஒரு சகோதர மாவட்டமாகவே கருதி, நமது சங்க செயல்பாடுகளில் அவர்களும் தலையிடுவது கிடையாது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இரு வேறு கருத்துடைய பிரிவுகள் இருக்கத்தான் செய்கின்றன. இதை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி சில வாட்சப் குரூப்பில் செயல்படுவதாக சந்தேகிக்கிறோம். இதன் தொடக்கமாக வாட்ஸ்அப் குரூப்பில் வெளி மாவட்டத்தில் உள்ள கலைஞர்களோடு, சென்னை மாவட்ட ஒளிப்படக் கலைஞர்களையும் சேர்த்து வைத்து கொண்டு குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர். தேவையற்ற பதிவுகள், மற்றும் புகைப்படங்களை தொடர்ந்து வெளியிட்டு அது குறித்து கலந்துரையாடல் என்கிற பெயரில். சர்ச்சையை ஏற்படுத்துகின்றனர். இதனால் சென்னை மாவட்ட சங்கத்தில் பிளவு ஏற்பட்டது போல் ஒரு மாய தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். நமது சங்க அமைப்பு என்பது ஒரு ஆலமரம் போன்றது. இதை அசைத்துப் பார்க்க முயற்சி செய்தவர்களின் கதை கடந்த காலங்களில் என்ன ஆனது என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். நமது சங்க விதிமுறைகள் குறித்து நன்கு அறிந்தவர்கள், தெரிந்தும் தெரியாதது போல், புதுப்புது பிரச்சனைகளை உருவாக்குகின்றனர். நமது சங்க அமைப்பு செயற்குழு மற்றும் பொதுக்குழுவின் ஆணைகளுக்கு உட்பட்டு செயல்படுகிறது என்பதை முதலில் நினைவில் கொள்ள வேண்டும். ஆரோக்கியமாக வளர்ச்சி அடைந்து வரும், நமது சங்க உறுப்பினர்களின் ஒற்றுமையை சீர்குலைக்க நினைப்பவர்கள் களை எடுக்கும் சூழ்நிலை விரைவில் உருவாகலாம். மாநில சங்க வழக்கு நீதிமன்றத்தில் உள்ளது. இது முடிவுக்கு வரும்போது பல உண்மைகள் எல்லோருக்கும் தெரியவரும் அப்போது நமது சென்னை மாவட்ட சங்கம் எடுக்கும் முடிவு நல்லதாகவே அமையும் என்ற நம்பிக்கை இன்றைய நிர்வாகத்துக்கு உள்ளது.

இதுவரை பல்வேறு மாநிலங்களில் நம் தொழில் சார்ந்த போட்டோ வீடியோ கண்காட்சியை சில தனியார் நிறுவனங்கள், அல்லது கார்ப்பரேட் நிறுவனங்கள் சார்பில் தான் நடைபெற்று வந்தன. இதனால் சங்கத்திற்கும் கேமரா தயாரிப்பு மற்றும் உபகரண விற்பனை யாளர்களுக்கும் இடையிலான நட்புறவில் மிக நீண்ட இடைவெளி இருந்து வந்தது. இதனை கருத்தில் கொண்டு இந்தியா முழுவதும் உள்ள மாநில சங்கங்கள் சார்பில் தற்போது ஃபோட்டோ வீடியோ கண்காட்காட்சிகள் அதிக அளவில் இப்போது நடைபெற்று வருகிறன. குறிப்பாக தென்னிந்தியாவில் கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா போன்ற மாநிலங்களை தொடர்ந்து தமிழகத்திலும், தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர் அசோசியேஷன் சார்பில் நான்காவது டிஜிமீடியா 2023 எக்ஸ்போவை சென்னை நந்தம்பாக்கம் டிரேடு சென்டரில் இம்மாதம் 13,14 ,15 ஆகிய மூன்று நாட்கள் நடத்துகிறது.

தமிழகத்தை பொறுத்தவரை, TVPA என அழைக்கப்படும் தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர் அசோசியேசன் 38 மாவட்ட சங்கங்களை வழிநடத்திச் செல்லும் ஒரு தலைமை அமைப்பாக இருந்து வருகிறது. அனைத்து மாவட்ட சங்கங்கள் கேட்டு கொண்ட வேண்டுகோளை ஏற்று, மாநில சங்கத்தின் வளர்ச்சி க்காகவும், ஏனைய மாவட்ட சங்க உறுப்பினர்கள் பயன் பெறும் வகையிலும் அன்றைய சென்னை மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன் அவர்களின் அனுமதியோடு சென்னை மாவட்டத்தில் டிஜி மீடியா கண்காட்சி நடத்த சென்னை மாவட்டம் முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று ஒப்புக்கொண்டது. இந்த கண்காட்சிக்கான பிரமோஷன் போஸ்டர் வெளியிடும் பணிகளை மாநில சங்கத்தின் முதன்மை நிர்வாகிகளும், சென்னை மாவட்ட சங்க முதன்மை நிர்வாகிகளும் முன்னின்று கவனித்து வருகின்றனர்.

தொழில்நுட்ப கண்காட்சி நடைபெறும் மூன்று நாட்களும் சென்னை டிரேடு சென்டரில் தமிழகத்தின் தலைசிறந்த ஒளிப்படப் பயிற்றுநர்களை கொண்டு, பயிற்சி பட்டறைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒளிப்பட கலையின் மீது ஆர்வம் உள்ள கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்காக புகைப்படப் போட்டி, குறும்படப் போட்டி, போட்டோவாக் போன்றவைகளுடன் புகைப்படக் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நமது நிர்வாகிகளின் வேண்டுகோளை ஏற்று, சென்னை, நந்தம்பாக்கம் டிரேடு சென்டரில் வரும் 14 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மதியம் 12 முதல் 1.30 மணி வரை திரு . ராஜாபொன்சி ங் அவர்கள் நமது சங்க உறுப்பினர்களிடையே இன்றைய போட்டோகிராபி குறித்து கலந்துரையாட இருக்கின்றார். இன்றைய போட்டோகிராபி தொழில்நுட்பத்தில் உங்களுகளின் கேள்விகளுக்கு பதில் அளிக்க உள்ளார். நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் மந்தவெளி பாபு அவர்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி அவரது உயிர் பிரிந்தது. நமது சங்கம் சார்பாக அவருக்கு அஞ்சலி செலுத்திய பிறகு நமது சங்கம் சார்பாக வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை 20,000 ரூபாயை அவரது வாரிசு தாரர்களிடம் வழங்கினோம்.

மார்ச் மாத ரெனிவல் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. மார்ச் 31 நிலவரப்படி 84 சங்க உறுப்பினர்கள் ரினிவல் செய்துள்ளனர். 17 உறுப்பினர்கள் புதிதாக சங்கத்தில் இணைந்துள்ளனர். ஆயுட்கால உறுப்பினர்களாக மூவர் நமது சங்கத்தில் புதியதாக இணைந்துள்ளனர். இது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இதற்காக உழைத்த நிர்வாகிகளுக்கும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் அடிக்கடி ஒரு புகாரை முன் வைக்கிறார்கள். அது சங்கத்திலிருந்து அனுப்பப்படும் பத்திரிகை மற்றும் கடிதங்கள் எதுவும் தங்களுக்கு கிடைக்கவில்லை . என்று கூறுகின்றனர்.எனவே உங்கள் முகவரி இடம் மாறி இருப்பின் சங்க PRO அல்லது உங்கள் பகுதி செயலாளரை அனுகி உங்கள் முகவரி மாற்றத்தை தெரிவிக்கலாம் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2013 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்அடிப்படையில்நமதுசெயற்குழுவில் எடுக்கப்பட்ட முடிவின்படி 10 வருடம் நிறைவடைந்த 204 ஆயுட்கால உறுப்பினர்களுக்கு பதிவு தபால் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்ட பின், 34 உறுப்பினர்கள் அவர்கள் விருப்பத்தின் அடிப்படையில் இன்சூரன்ஸ்ஸுக்கான தொகையை செலுத்தி விட்டனர். இவர்களுக்கு இன்சூரன்ஸூம் கட்டப்பட்டு விட்டது.மேலும் சிலர் தங்களுக்கு இன்சூரன்ஸ் வேண்டாம் என்று கடிதம் கொடுத்து வருகின்றனர். இன்னும் சிலர் சங்க அலுவலகத்திற்கு நேரில் வந்து கடிதம் கொடுப்பதாக உறுதி அளித்துள்ளனர். 10க்கும் மேற்பட்டவர்கள் வயது முதிர்வின் (விபத்து காப்பீடு இன்சூரன்ஸ் நிறுவனத்தின் விதிப்படி 70 வயதை கடந்தவர்கள்) காரணமாக குரூப் இன்சூரன்ஸ்ஸூக்கான தகுதியை இழந்துவிட்டனர். 2013 பொதுக்குழுவின் தீர்மானப்படி, செயற்குழுவில் எடுத்த முடிவின்படி விபத்து காப்பீடு இன்சூரன்ஸ் தொகை செலுத்தாதவர்களின் பெயர்கள் இன்சூரன்ஸ் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

கிரிக்கெட்டில் ஆர்வம் உள்ள நமது சங்க உறுப்பினர்களை ஊக்குவிக்கும் விதமாக நீண்ட இடைவெளிக்குப்பின் மாபெரும் கிரிக்கெட் போட்டி ஏப்ரல் மாதம் நடைபெற உள்ளது. 15 க்கும் மேற்பட்ட கிரிக்கெட் குழுக்கள் கலந்து கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நமது சங்க நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்களும் இதற்கான ஏற்பாடுகளை வெகு சிறப்பாக செய்து வருகின்றனர். சங்க உறுப்பினர்கள் அனைவரையும் இந்த கிரிக்கெட் போட்டி மற்றும் டிஜிமீடியா 2023 போட்டோ வீடியோ கண்காட்சியை காண எல்லோரையும் அன்போடு அழைக்கிறோம். இத்துடன் கீழே டிஜி மீடியா கூப்பன் கொடுக்கப் பட்டுள்ளது.

இப்படிக்கு,

**DM.பிரேம்குமார்,** CVPA செயலாளர்





கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த நமது சங்க உறுப்பினர் முரளி அவர்களின் இளைய மகள் ஸ்வேதா- கார்த்திக் ஆகிய இருவரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க செயலாளர் DM. பிரேம்குமார், PRO. N. ரவிக்குமார், கொளத்தூர் பகுதி செயலாளர் A. இளங்கோ மற்றும் மூத்த உறுப்பினர்கள் ஆகியோர் நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினார்கள்.

# Portrait Impression Balance

**புலிவலம் ரவி** (திருச்சி)
94427772408

ஒவ்வொரு முன்னணி கேமரா வைத்திருக்கும் ஒவ்வொரு ஒளிப்படக்கலைஞரும், ஒவ்வொரு நோக்கத்திற்காக அல்லது அந்த கேமராவிலுள்ள பல்வேறு தொழில்நுட்ப வசதிகள் தேவைப்படும் காரணத்தால் அந்த கேமரா பிடித்து போக வாங்கியிருப்பார்கள். அதுபோன்ற ஒரு தொழில்நுட்ப வசதிதான் கலர் டோன். அந்த கலர் டோன் என்பது, ஒவ்வொரு ஒளிப்படக்கலைஞருக்கும் ஒவ்வொரு கலர் டோன் வகைகளில் ஏதாவது ஒரு வகை பிடிக்கும். அந்த கலர் டோன் என்பதில்தான்; ஸ்கின் டோனும் (போர்ட்ரைட்) அடங்கியிருக்கிறது. அது ஒவ்வொரு கேமராவிற்கும் அதனுடைய சாப்ட்வேரை பொறுத்து சற்று அல்லது நிறைய மாறுபடும்.

படத்தில் கலர் டோனை கொண்டு வருவதில் முக்கிய பங்காற்றுவது என்பது ஏற்கனவே நாம் பார்த்த அந்த கேமராவின் 1. ஸாப்ட்வேர், 2. இமேஜ் குவாலிட்டியின் ரா பார்மேட், 3. ஹை பிட் ரேட், 4. கலர் ஸ்பேஸ், 5. செட் பிக்சர் கண்ட்ரோல் மற்றும் அதன் உட்பிரிவுகள் 6. வொயிட் பேலன்ஸ் போன்றவை களாகும்.


ஒரு சில ஒளிப்படக்கலைஞர்கள் ஒரு குறிப்பிட்ட கம்பேனி கேமராவின் கலர் டோன்தான் பெஸ்ட் என்பார்கள், ஒரு சிலர் இல்லையில்லை வேறொரு கம்பேனி கேமராவின் கலர் டோன்தான் பெஸ்ட் என்பார்கள், ஒரு சிலர், இன்னும் ஒரு படி மேலே போய், குறிப்பிட்ட அந்த நிறுவன கேமராவில்தான் மட்டும்தான் கலர் டோன் நன்றாக இருக்கிறது. மற்ற நிறுவன கேமராக்கள் எல்லாம் வேஸ்ட் என்பது போல தனது அறிவுத்திறனை வெளிப்படுத்துவார்கள்.


மேலும் ஒரு சிலர் குறிப்பிட்ட நிறுவன கேமராதான் நம் நாட்டு மனிதர்களின் ஸ்கின் டோனுக்கு (நிறத்திற்கேற்றவாறு) ஏற்றவாறு படமெடுக்கும் என்றும் கூறுவார்கள். இதுபோல ஸ்கின் டோனை பற்றிய பல்வேறு விவாதங்கள், தகவல்கள் நமது ஒளிப்படக்கலைஞர்களிடையே நாம் நிறைய கேட்டிருக்கிறோம்.


இதற்கெல்லாம் பதில் தருவது போல அல்லது ஒரு பிரச்னைக்கு தீர்வு சொல்லுகின்ற வகையில் நிக்கானின் அனைத்து மாடல் மிர்ரர்லெஸ் கேமராக்களிலும் போர்ட்ரைட் இம்ப்ரெசன் பேலன்ஸ் (Portrait Impression Balance) என்றவொரு புதிய தொழில்நுட்ப வசதியை கொண்டு வந்துள்ளார்கள்.

பெரும்பாலும் வழக்கம்போல கலர் டோன் அல்லது ஸ்கின் டோனை கொண்டு வர செட் பிக்சர் கண்ட்ரோல் வசதியை பயன்படுத்துவோம். இந்த வசதிக்கு மாற்றாக போர்ட்ரைட் இம்ப்ரெசன் பேலன்ஸ் வசதியை அறிமுகம் செய்துள்ளார்கள். இதில் நமக்கு பிடித்தவாறு ஸ்கின் டோனை அமைத்துக்கொள்ளலாம்.

நாம் முன்னரே பார்த்தது போல ஒவ்வொரு ஒளிப்படக்கலைஞருக்கும் ஒவ்வொரு வகையான கலரில் ஸ்கின் டோன் பிடிக்கும் என்று, அது போல நாம் எந்தவொரு முண்ணணி நிறுவன கேமராவின் ஸ்கின் டோனையும், இதில் செட் செய்து கொள்ளலாம்.




மெனு செட்டிங்-ல் போட்டோ சூட்டிங் மெனு வரிசையில் Portrait Impression Balance வசதியை ஆன் செய்து கொள்ளவேண்டும். இப்போது கீழ்க்கண்ட படத்தில் காண்பித்துள்ளது போல Color Balance கட்டம் ஓபன் ஆகும் அதில் மெஜந்தா-மஞ்சள் வண்ணங்களில் அட்ஜஸ்ட் செய்து மல்டி செலக்டாரை கொண்டு, பாயண்;டரை நகர்த்தி, நமக்கு தேவையான வண்ணங்களில் ஸ்கின் டோனை அமைத்துக்கொள்ளலாம். அதோடு கூடுதலாக ப்ரைட்னஸ்-யும் கூட்டி, குறைத்துக்கொள்ளலாம்.

இந்த வசதியில் மூன்று வகையான ஸ்கின் டோன்களை செட் செய்து கொண்டு நமக்கு பிடித்த ஸ்கின் டோனில் படமெடுக்கலாம். (படம் காண்க)

பார்ப்பதற்கு வொயிட் பேலன்ஸில் பயன்படுத்தும் பைன் ட்யூன் வொயிட் பேலன்ஸ் வசதி போலவே இருக்கும். ஆனால் அது கிடையாது. இதற்கும் வொயிட் பேலன்ஸ்-ற்கும் தொடர்பு கிடையாது.

Portrait Impression Balance வசதியை பயன்படுத்தும்போது, நாம் ஏற்கனவே படப்பதிவை அமைப்பதற்காக கேமராவில் செட் செய்திருக்கும் வொயிட் பேலன்ஸ்-ஆல் ஏற்படும் வண்ண அமைப்பில் எவ்வித மாற்றங்களும் இருக்காது.

அதேபோல Portrait Impression Balance வசதியை ஆன் செய்தவுடன், செட் பிக்சர் கண்ட்ரோல் வசதி தானாகவே ஆப் ஆகிவிடும். இதை ஆப் செய்தவுடன் செட் பிக்சர் கண்ட்ரோல் வசதி தானாகவே ஆன் ஆகிவிடும்.

நிக்கான் நிறுவனம் தனது ஒவ்வொரு மிர்ரர்லெஸ் கேமராவை வெளியிடும்போதெல்லாம் ஏதாவது ஒரு புதிய தொழில்நுட் வசதியை அறிமுகம் செய்துகொண்டேயிருக்கிறார்கள். இதுபோன்ற தொழில்நுட்ப வசதிகயை பயன்படுத்தி தொழிலில் மேன்மையுறுவோம்.

நன்றி நண்பர்களே... அடுத்து வேறு ஒரு புதிய கட்டுரையில் உங்களை சந்திக்கிறேன்...
அட்மின் தமிழ்நாடு கேமரா டெக்னிக்கல் க்ளப்.




## வருந்துகிறோம்



நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினராகிய மந்தைவெளி பாபு என அழைக்கப்படும் M.பாபு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறைவனடி சேர்ந்தார். அன்னாருக்கு நமது சங்கம் நிர்வாகிகள் இறுதி அஞ்சலி செலுத்திய பின், நமது சங்கம் சார்பாக வழங்கப்படும் ஈமச்சடங்கு தொகை ரூபாய் 20,000 அன்னாருடைய வாரிசுதாரர்களிடம் வழங்கப்பட்டது. அவரை பிரிந்து வாடும் அவர்கள் குடும்பத்தினருக்கு நமது சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்நாடு வீடியோ & போட்டோகிராபர்ஸ் அசோசியேசன்

TVPA's Digi Media 2023

4th EDITION

(march towards technology)

## A MEGA PHOTO & VIDEO IMAGING EXHIBITION

KLR the photo guru

CVPA சார்பில் நடைபெறும்

## 'Photographyயும் நானும்'

ஒரு கலந்துரையாடல்...

**Photography** பற்றி ஜாலியா பேசலாம்.



KL. Raja Ponsing

*(KLR the photo guru - YouTube Channel)*

Date: 14.04.2023
Time: 12.30 - 1.30pm
TRADE CENTER, CHENNAI.

டெக்னாலஜி, ஆர்ட், கான்செப்ட், கேமிரா, லென்ஸ், லைட், Profession, Career, பிசினஸ் என உங்கள் கேள்விகளுக்கு, சந்தேகங்களுக்கு பதில் பெறுங்கள்.

வாங்க சந்திக்கலாம்!

The Great Grand Show. For the Professionals.... By the Professionals.

. CAMERAS . STUDIO ACCESSORIES . EDITING SOFTWARE
. WORKSHOP . PHOTO CONTEST . FASHION SHOW

## சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

நெ : 48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை – 600 002

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper,
**RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**

Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821
Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,**
No.8. Muktharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351

**If undelivered please return to**
Chennai Video & Photographers' Association,
**at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821**

Postal Registration no TN/ARD/11/2021-2023 WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 10.04.2023

To